தனிச்சுற்றுக்கு மட்டும்

பதிப்பு 04 | ஏப்ரல் - ஜூன் 2020

# FINANCIAL Insights

Powered by CRK Financial Solutions



# பட்ஜெட் 2020 உங்கள் முதலீடுகளை பாதிக்குமா?

# அன்பு நண்பர்களே வணக்கம்!



உங்கள் அனைவருடனும் இந்த இதழின் இந்தக் கடிதம் வழியே உரையாடுவது, மகிழ்ச்சியையும் நிறைவையும் தருகிறது. நீங்கள் அனைவரும் எங்களின் சேவைகள் மூலம் முதலீடும் சேமிப்பும் செய்து கொள்வதன் மூலம் நாங்கள் உங்கள் நம்பிக்கையினைப் பெற்றிருக்கிறோம் எனும் உற்சாகத்தை எங்களுக்கு ஊக்கமாக வழங்கி வருகின்றீர்கள்.

எங்களின் சேவைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நீங்கள் வழங்கும் கருத்துகளும் அறிவுரைகளும் எங்களை வழி நடத்துகிறது என்பதை பெருமையுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். நீங்கள் வழங்கும் இந்த ஆதரவு எங்களின் வளர்ச்சியில் நீங்கள் காட்டும் அக்கறையென்பதை நினைத்து நாங்கள் மகிழ்ச்சியும் நன்றியும் உடையவர்களாகின்றோம். ஜனவரி 2020ல் நமது CRK நிறுவனம் நடத்திய மருத்துவ முகாம் உங்களுக்குப் பயனுள்ளதாக அமைந்திருக்கும் என நினைக்கிறோம். உங்களில் பலரை நேரில் சந்திக்க நல்வாய்ப்பாகவும் அந்த முகாம் அமைந்தது,மிக்க மகிழ்ச்சி.

நாம் 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தினை எதிர் நோக்கி இருக்கின்றோம். ஒரு புதிய நிதி ஆண்டில், அரசின் புதிய நிதி நிலை அறிக்கை செயல்பாட்டுக்கு வரும் தருணத்தை எதிர் கொள்கின்றோம். நமது சேமிப்பு நமது முதலீடு எனும் அம்சத்தினைக் கவனத்தில் கொண்டு நாம் ஒவ்வொரு நிதி ஆண்டும் நிதி நிலை அறிக்கையினை கவனித்து வருகின்றோம். வரும் நிதி ஆண்டின் நிதி நிலை அறிக்கை மூன்று முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்தியிருக்கின்றது.

மக்களின் எதிர்பார்ப்புகளைக் கொண்ட இந்தியா, பொருளாதாரா மேம்பாடு, அக்கறை கொண்ட சமூகம் எனும் மூன்று காரணிகள் அவை. இந்த முறையில் சில முக்கிய அம்சங்களில் முக்கிய மாறுதல்கள் கொண்டதாக அமைந்திருக்கிறது நிதி நிலை அறிக்கை.

ஜிஎஸ்டி வரி நிர்ணய அமைப்புகளில் மாற்றம், டிஜிட்டல் பரிவர்த்தனைகள், கட்டமைப்பு வசதி, ஓய்வூதியத் திட்டங்கள், ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களை விரிவாக்கம் செய்வதன் மூலம் சமூகப் பாதுகாப்பு வழங்குதல், முதலீடுகளுக்கான காப்பீட்டினை மேலும் வலுப்படுத்துதல், வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் இருந்து வசூல் செய்ய வேண்டிய இனங்களுக்குப் பாதுகாப்பு, அரசு பத்திரங்களில் அயல் நாட்டு வாழ் இந்தியர் முதலீடு செயல் முறைகளில் மாற்றம், கார்பொரேட் வரிகளில் சீரமைப்பு, அயல் நாட்டு அரசுகளிடமிருந்து பெறப்படும் முதலீடுகளில் சலுகை/சீர்திருத்தம், தனி நபர் வருமான வரி விகிதங்களில் மாற்றங்கள் என்பன மிக முக்கிய அம்சங்கள்.

# பங்குச் சந்தையும், நோய்த் தொற்றும்

பங்குச் சந்தை, நிதி முதலீடுகள், வரி விகிதங்கள், தங்க விலை எங்கும் வீழ்ச்சி, முதலீட்டாளர்களும் நடுத்தர வர்க்கத்து மக்களும் கலங்குகின்றனர்.

வர்த்தகத்தை நலிவடைய வைத்து, வர்த்தக முதலீடுகளை நிலை குலைய வைத்து, பொருளாதாரத்தில் மிகப் பெரும் அதிர்வுகளை உண்டாக்கி வருகிறது, கொரோனா வைரஸ். ஒரு நோய்த் தொற்றாக அது ஏற்படுத்தும் பாதிப்பை கண் கூடாகக் காண இயல்கிறது. மக்கள் அஞ்சுகின்றார்கள், மருத்துவ ரீதியாகப் பாதுகாப்பை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள்.

இந்த கொரோனா வைரஸ் காரணமாக பங்கு சந்தையில் ஏற்பட்டிருக்கும் சரிவு நிரந்தரமல்ல. இந்த சரிவிலிருந்து மீண்டு பங்கு சந்தை புதிய உயரங்களை, லாபங்களை எட்டும் என்பது தான் உண்மை. ஆகவே இந்த தற்காலிகச் சரிவுகளைக் கண்டு மனம் கலங்கி உங்கள் பங்கு முதலீடுகளை திரும்பப் பெறாது, நம்பிக்கையோடு இருப்பது நல்ல தீர்மானமாக இருக்கும்.

இதற்கு முந்தைய காலங்களில் வரலாறு நமக்குச் சொல்லும் பாடத்தினைக் கவனிக்கலாம்.

1992-ம் ஆண்டு சென்செக்ஸ் 54% வீழ்ந்தது ஆனால் அடுத்த 1.5 ஆண்டுகளில் 127% உயர்ந்தது.

1996-ம் ஆண்டு 40% வீழ்ந்த சென்செக்ஸ் அடுத்த ஆண்டே 115% உயர்ந்தது.

2000-ம் ஆண்டில் 56% விழ்ந்த சென்செக்ஸ் இரண்டரை ஆண்டு காலத்தில் 138% என உயர்ந்தது.

அதே போல 2008-ம் ஆண்டு 61% வீழ்ந்தது ஆனால் அடுத்த ஒன்றரை ஆண்டில் 157% வளர்ந்தது

2010-ம் ஆண்டிலும் சென்செக்ஸ் 28% வீழ்ந்தது ஆனால் ஒரே ஆண்டில் அது 96% உயர்ந்தது

2015-ம் ஆண்டில் நிகழ்ந்த வீழ்ச்சியில் 22.3% வீழ்ச்சி கண்ட சென்செக்ஸ் ஏழே மாதங்களில் மீண்டது.

> நாலடியார்
>
> செல்வர்யாம்' என்று தாஞ் செல்வுழி எண்ணாத
> புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லிற்
> கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப் போற் றோன்றி
> மருங்கறக் கெட்டு விடும்
>
> விளக்கம் :
> அவசரத்தில் நீதி நெறி பார்க்காமல் திரட்டிய பணம் அதைவிட அவசரமாகக் காணாமல் போய் விடும்.



**Do you know?** CAGR - Compounded Annual Growth Rate

# நிதியாண்டு 2020-2021
# வருமான வரி ஒரு பார்வை



**Mr.T R Krishnamurthy**
*Chartered Accountant*
**catrkauditor@gmail.com**

*மத்திய அரசின் 2020-2021 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் (பட்ஜெட்) குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.*

*இதுவரை நடைமுறையில் இருக்கும் வரிவிகிதங்களின்படியும் (மாற்றங்களுடன்) புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள வரிவிகிதங்களின் படியும் வருமான வரி செலுத்தும் ஒருவர் தனது விருப்பமாக இதில் ஏதாவது ஒரு திட்டத்தினைத் தேர்வு செய்யலாம்.*

*இந்த அட்டவணை இந்த திட்டங்களை ஒப்பீடு செய்யவும் புரிந்து கொள்ளவும் உதவும்.*

| ஆண்டு வருமான வரி வரம்பு | புதிய திட்டத்தின்படி | பழைய நடைமுறைப்படி |
|---|---|---|
| ₹ 2.5 லட்சம் வரை | Exempt | Exempt |
| ₹2.5 லட்சத்துக்கும் மேல் 5 லட்சம் வரை | 5% | 5% |
| ₹5 லட்சத்துக்கும் மேல் 7.5 லட்சம் வரை | 10% | 20% |
| ₹7.5 லட்சத்துக்கும் மேல் 10 லட்சம் வரை | 15% | 20% |
| ₹10 லட்சத்துக்கும் மேல் 12.50 லட்சம் வரை | 20% | 30% |
| ₹12.50 லட்சத்துக்கும் மேல் 15 வரை | 25% | 30% |
| ₹15 லட்சத்துக்கும் மேல் | 30% | 30% |

*இந்த இரண்டு திட்டங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யும் உரிமை இருந்தாலும், சம்பளம் வாங்கி வேலை பார்ப்பவர்கள் இதுவரை கொண்டிருந்த சலுகைகளான விடுப்பு கால பயணக் கட்டண சலுகை, வீட்டு வாடகைப்படியில் கிடைத்த சலுகை, வீட்டுக் கடன் திரும்பச் செலுத்துவதில் கிடைத்த வரிச் சலுகை இவை யாவும் இனி கிடைக்கவிருப்பதில்லை. ஆனால் பணி ஓய்வு கால பலன்களாக பணி முதிர்ச்சி பலன்கள், வருங்கால வைப்பு நிதி, தேதிய ஓய்வு நிதியில் சேமிப்பு, விருப்ப ஓய்வின் காரணமாக கிடைக்கும் பலன்கள் (7.50 லட்சம் வரை) இவற்றில் வரிச் சலுகைகள் உள்ளன.*

*புதிய வரிவிதிப்பினை தேர்வு செய்தால் ஒருங்கிணைந்த ஹிந்து குடும்பங்களுக்கு கிடைத்து வந்த Alternate Minimum Tax (AMT) எனும் சலுகை இனி பொருந்தாது.*

*புதிய திட்டத்தின் படி வருமான வரி நிர்ணயம் செய்திட ஒருங்கிணைந்த ஹிந்து குடும்பம் எனும் வரையறைக்குள் வருகின்றவர்கள் வருடா வருடம் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் போது தங்கள் தேர்வினைத் தெரிவிக்கலாம். அதன்படி அந்த நிதியாண்டுக்கும் வரும் நிதியாண்டுகளுக்கும் அந்தத் தேர்வினை நீட்டித்துக் கொள்ளவும் இயலும்.*

*வைப்பு முதலீடுகளுக்கு வழங்கப்படும் காப்பீடு ₹5 லட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*

*பங்குகளின் மீது பெறப்படும் வட்டி போன்ற Dividend Distibution Tax-க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த முறை கைவிடப்படுகிறது. இது போன்ற Dividendக்கும் இனி வரி செலுத்த வேண்டும்.*

*வருமான வரிச்சட்டம் 194J படி தொழில் நுட்பசேவைக்கான வரி விகிதம் 10% இருந்தது 2% குறைக்கப்பட்டுள்ளது.*

*இந்திய நிறுவனங்கள் தங்கள் பங்கு முதலீட்டாளர்களுக்கு வழங்கும் Dividend தொகை ஆண்டுக்கு ₹5000 தாண்டுமெனில் அதற்கு 10% வரிப் பிடித்தம் செய்யப்படும். வருமான வரிச்சட்டப் பிரிவு 80EEA-ன் படி, வீட்டு வசதிக் கடன் திரும்பச் செலுத்தும் தொகை மீது வழங்கப்படும் வரிச் சலுகையான 1.50 லட்சம், வரும் 31 மார்ச் 2021 வரை வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன்களுக்கு மட்டுமே பொருந்தும்.*

*தனி நபர் தொழில் முனைவோராக இருப்பார் எனில் அவருக்கான வருடக் கணக்குகள் வரிக்கான ஆய்வுக்கு உட்பட்டவையாக ஆக்க அவரது ஆண்டு வியாபாரம் 1 கோடி என இருந்ததை 5 கோடி என மாற்றியமைக்க நிதி நிலை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் அந்த வியாபாரத்தில் ரொக்கப் பரிவர்த்தனைகள் 5% க்கும் மிகாது இருந்தால் மட்டுமே இந்த சலுகை பொருந்தும் எனவும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது . இப்படியான தொழில் முனைவோர் தாக்கல் செய்யும் தணிக்கையாளர் அறிக்கையினை 30 செப்டம்பருக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்பதில் மாற்றமில்லை. ஆனால் வருமான வரி அறிக்கையினை தாக்கல் செய்ய இறுதி நாள் 30 செப்டம்பர் என்பது 31 அக்டோபர் என நீட்டிக்கப்பட்டுள்ளது.*

## NRI-க்கு புதிய விதிமுறைகள்

*ஒருவரின் வசிப்பிடம் தொடர்பான வருமான வரி சட்டம் நடைமுறைகள், விதிகளில் சில மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

*1. இந்திய குடிமகன் ஒருவர் முந்தைய ஆண்டுகளில் வேறு எந்த நாட்டிலும் வரி செலுத்தாதவர் எனில் அவர் இந்தியாவில் வசிப்பவர் என்றே கருத்தப்பட்டு அவருக்கு இந்தியா மற்றும் ஏனைய நாடுகளில் இருந்து கிடைக்கும் வருமானம் வரிக்கான வருமானம் என கணக்கிடப்படும்.*

*2. அயல்நாட்டு வாழ் இந்தியர் அல்லது இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர் இந்தியாவுக்கு வருகை தந்து இந்தியாவில் 120 நாட்கள் தங்கினால் அவர் இந்திய குடிமகன் என கருதப்படுவர். இதற்கு முன்பு இது 182 நாட்களாக இருந்தது.*

*3. ஹிந்து ஒருங்கிணைந்த குடும்பத்தின் தலைவர் கடந்த பத்து ஆண்டுகளில் ஏழு ஆண்டுகள் அயல்நாட்டில் வசித்தால் அவர் Not Ordinary citizen என்று கருதப்படுவார்.*

***Do you know?*** ETF - Exchange Traded Fund



**Mr.R.Gopinath., CEO**
*Gopast Centre for learning Pvt Ltd*

# காலத்தே புறப்பட்டு
# நேரத்தே அடைவது

*"Regularity is the key to wealth, not ROI"!*

நீங்கள் வாகனம் ஒட்டிக் கொண்டு செல்லும் போது ஒவ்வொரு சிக்னலிலும் ஓர் அறிவிப்பை தவறாது கவனிக்கலாம் "சீக்கிரம் கிளம்பி செல்லும் இடத்துக்குப் பாதுகாப்பாக செல்லவும்" இந்த அறிவிப்பு வாகனம் ஒட்டிச் செல்வதற்கு மட்டுமில்லை, பயணத்துக்கானது மட்டுமில்லை. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இந்த அறிவுரை சாலப் பொருந்துமே!

ஓர் இடத்தை அடைவதற்கு முன்பு அந்த இடத்தை அடைவதற்கான வழி, செல்லும் பாதையில் இருக்கும் சவால்கள், தடைகள் இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, இதையெல்லாம் சந்தித்து சேர வேண்டிய இடத்தை சரியான நேரத்தில் அடைய வேண்டுமென்றால், அதற்கு எப்போது புறப்பட்டால் சரியாக இருக்கும் என்பதையும் கணக்கிடுவோம் அல்லவா!. அது தான் மிக முக்கியம். அதைத்தான் அந்த அறிவிப்பு நமக்கு அறிவுறுத்துகிறது.

சேமிப்பு, முதலீடுகளிலும் சென்றடைய வேண்டிய இலக்கு என்பது உண்டல்லவா!! முதலீடுகளைச் செய்வதில் கவனமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள், நிதிச் சந்தையில் இருக்கும் சவால்கள், எந்த நிறுவனத்தில் என்ன வட்டி விகிதம் கிடைக்கும் இப்படி பல அம்சங்களைக் கணக்கிட்டு எப்போது சேமிப்பை முதலீட்டைத் தொடங்கினால் அது சரியான நன்மை தரும்., நாம் விரும்பிய நேரத்தில் திட்டமிட்டபடி தொகையினைச் சேமிப்பில் அல்லது முதலீட்டில் அடைய இயலும் என்பதைக் கணக்கிட்டு சரியான நேரத்தில் தொடங்க வேண்டும் என்பது அவசியம்.

எளிமையான சில உதாரணங்களை விளக்கினால் நீங்கள் சுலபமாகப் புரிந்து கொள்வீர்கள். பிரகாஷ், அதுல் இருவரும் நண்பர்கள். ஒரே நிறுவனத்தில் வேலை பார்க்கின்றார்கள். இருவரும், ஒரே சம்பளம் தான் வாங்குகின்றார்கள். இருவருக்கும் ஒரே மாதிரி குடும்பப் பொறுப்புகள், மாதச் செலவுகளும் ஒன்று போலவே தான். இவர்கள் இருவரின் சேமிப்பு/முதலீட்டு செயல் முறைகளைக் கவனிக்கலாம்.

அதுல் தனது 25வது வயதிலிருந்து 35வது வயது வரையிலான 10 ஆண்டுகளுக்கு, மாதம் ₹10,000 8% வட்டி பெறக்கூடிய திட்டமொன்றில் சேமிப்பைத் தொடங்கினார். 35 வயது அடைந்த போது அந்த சேமிப்பில் கிடைக்கும் தொகையினை தனது ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்வது அவரது திட்டம். 35 வயதுக்குப் பிறகு ஈட்டும் வருமானத்தினை குடும்ப செலவு, பிள்ளைகளின் கல்வி, திருமணம் என செலவு செய்வதாகவும் திட்டம். இருவரும் 60 வயதில் பணி ஓய்வு அடைவார்கள். ஆனால் பிரகாஷ் தனது 50 வயதில் மாதம் ₹10,000 என சேமிக்கத் தொடங்கினார். அதே போல 8% வட்டி தரும் திட்டம்.

முதலீட்டின் மூலம் இருவரும் பெற்ற தொகை என்ன தெரியுமா, அதுல் பெற்றது ₹1,26,12,000. ஆனால் பிரகாஷ் பெற்றது 18,41,000 மட்டுமே. காலத்தே தொடங்கிய அதுலுக்கு கிடைத்த தொகை பெரும் தொகை.

இதே தொகையை பிரகாஷ் பெற்றிருக்க வேண்டுமெனில் அவர் 50 வயதில் சேமிப்பைத் தொடங்கினால் மாதம் ₹68,500 சேமிக்க வேண்டியிருந்திருக்கும். அல்லது அவருக்கு 37% வட்டி தரும் சேமிப்புத் திட்டம் வேண்டும். இரண்டுமே சாத்தியமில்லாத நிலை தானே.. இதற்குத்தான் சொல்வது "காலத்தே தொடங்கு".

இன்னுமொரு கணக்கினையும் உதாரணமாகக் கவனிக்கலாம், அதுல் தனது 25 வயதிலிருந்து 60 வயது வரை மாதம் ₹10,000 வீதம் 8% வட்டி தரும் சேமிப்புத் திட்டத்தில் சேமிக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். பிரகாஷ் இதே திட்டத்தில் 35 வயதிலிருந்து தொடங்கி 60 வயது வரை மாதம் ₹10,000 சேமிக்கின்றார் என வைத்துக் கொள்ளுங்கள். அதுலுக்கு கிடைப்பது ₹2,31,00,000. ஆனால் பிர்காஷுக்கு கிடைப்பது ₹95,00,000 மட்டுமே. இதிலும் அதுலுக்கு கிடைப்பது போலவே பிரகாஷுக்கு தொகை கிடைக்க வேண்டுமெனில் அவர் மாதம் ₹24,100 சேமித்திருக்க வேண்டும்., அல்லது 13.2% வட்டி தரும் திட்டத்தில் சேமித்திருக்க வேண்டும்.

ஒருவேளை பிரகாஷ் தனது 40வது வயதில் இதே முதலீட்டில் முதலீடு செய்திருந்தாலும், அவருக்கு 60 வயதில் ₹59,00,000 தான் கிடைத்திருக்கும். அதுலுக்கு கிடைப்பது போல பிரகாஷுக்கு கிடைக்க அவர் மாதம் ₹39,000 சேமித்திருக்க வேண்டும் , அல்லது மாதம் ₹10,000 சேமிப்பில் 18% வட்டி கொண்ட திட்டத்தில் சேர்ந்திருக்க வேண்டும்.


இவை இரண்டுமே நடை முறைக்கு சாத்தியமில்லாதவை. இதற்குத்தான் சொல்வது காலத்தே தொடங்கு என்று.




**Do you know?** FIFO - First in, First out

| திரு. அதுல் | வயது 25 to 35 | 60 வயதில் நிதி | IRR |
|---|---|---|---|
| | 10,000 per month | 1,26,12,000 | 8% |
| திரு. பிரகாஷ் | Age 50 to 60 | | |
| | 10,000 per month | 18,40,000 | 8% |
| | 68,500 per month | 1,26,12,000 | 8% |
| | 10,000 per month | 1,26,12,000 | 37.5% |
| | | | |
| திரு. அதுல் | Age 25 to 60 | Fund at age 60 | IRR |
| | 10,000 per month | 2,31,00,000 | 8% |
| திரு. பிரகாஷ் | Age 35 to 60 | Age 35 to 60 | |
| | 10,000 per month | 95,00,000 | 8% |
| | 24,100 per month | 2,31,00,000 | 8% |
| | 10,000 per month | 2,31,00,000 | 13.2% |
| திரு. பிரகாஷ் | Age 40 to 60 | | |
| | 10,000 per month | 59,00,000 | 8% |
| | 39,000 per month | 2,31,00,000 | 8% |
| | 10,000 per mont | 2,31,00,000 | 18% |

# காலத்தே சேமிக்க தொடங்க சுமை குறையும்




## 18 வயதில் தேவைப்படும் தொகை ₹ 25 இலட்சம்




**திருக்குறள்**

> ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
> போற்றி வழங்கும் நெறி.

விளக்கம் :
சரியான வழியில் பிறருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதை சரியாக கணக்கிட்டு கொடுக்காதவர் வாழ்க்கை இருப்பது போல தோன்றி உண்மையில் இல்லாததாகிவிடும்

**We're Social**

+91 99416 06398

username
CRK Financial Solutions


01
வா செல்வம். இது என்ன புது பழக்கம். ஒரு சந்தேகம் கேட்கணும் நேரில் வரலாமானு கேட்டுகிட்டு. என்ன சந்தேகம் சொல்லு.
ஒன்னுமில்லை. என் ஆபிஸ் நண்பன் கேட்டான். நீ இறந்து போனதுக்கப்புறம் கிடைக்கிற பணத்துக்கு ஏன் இப்ப முதலீடு செய்றேனு கேட்டான். உன்னைக் கேட்டால் நீ விளக்கம் சொல்லுவியேனு தான்.
02
முக்கியமான கேள்வி இது செல்வம். ஆயுள் காப்பீடு என்பது இரண்டு முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யுது. அதாவது நீண்ட நாள் தேவை + எதிர்பாராத வயதில் இறந்தால், அவர் குடும்பத் தேவையினைப் பூர்த்தி செய்ய.
கொஞ்சம் விபரமாகவே பதில் சொல்லு அறிவு. அப்ப இன்ஷுரன்ஸ் அப்படிங்கறது இறப்புக்கு பின் கிடைக்கும் பணம் இல்லையா.
03
ஒருவர் தனக்கு இன்ஷுரன்ஸ் எடுத்துக் கொள்ளும் போது, அதற்கு ப்ரீமியம் கட்டுகிறார். அவருக்கு பாலிசி முடிவில் இன்ஷுரன்ஸ் தொகை, போனஸ், இன்னும் சில சலுகைகளும் கிடைக்கும். பாலிசிதாரர் இல்லாத பட்சத்தில் அவரது குடும்பத்துக்கு போகும்.
அப்படின்னா அறிவு, லைஃப் இன்ஷுர் செய்தால் அதற்காக கட்டும் ப்ரீமியம் வீணாகப் போகாது கரெக்டா.
04
ஆயுள் காப்பீட்டில் இரண்டு முக்கிய விஷயம். நாம இன்ஷுரன்ஸ் எடுக்கும் போது சேமிப்பும் செய்கிறோம் அதே சமயம் எதிர்பாராத மரணத்தினால் நம்மை சார்ந்தவர்களுக்கு வரும் பாதிப்பிலிருந்து ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கும்.
05
ஒரு பாலிசிதாரர் எதிர்பாராத மரணம் அடைந்து விட்டால், அவர் குடும்பத்துக்கு பெரிய நஷ்டம். ஆனால் இன்ஷுரன்ஸ் பணம் வரும். அதைக் கொண்டு சில பிரச்சனைகளை சமாளிக்கலாம். இதுவே இன்ஷுரன்ஸ் பாலிசி எடுக்கலைனு வை, ரொம்ப சிரமப் படுவாங்களே.
இப்ப இன்னொரு கேள்வி, அறிவு. இன்ஷுரன்ஸ் பாலிசி எடுத்து ஒழுங்கா ப்ரீமியம் கட்டறதோட முக்கியத்துவம் சம்பந்தமா கொஞ்சம் விபரமாகச் சொல்லேன்
செல்வம்
ப்ளான் பண்ணி
அறிவு
செய்யணும்
தொடர் - 04
06
சொல்றேன். பெட்ரோல் போடவில்லை என்றால் எந்த வண்டியும் ஓடாது. அது மாதிரி தான் ப்ரீமியம் கட்றதும். இப்ப எல்லாம் ஆன் லைனில் செலுத்தி உடனே ரசீது கிடைக்கும். இன்ஷுரன்ஸ் ப்ரீமியம் கட்றதுக்கு வருமான வரியில் சில சலுகைகளும் உண்டு.
நிறைய டைப் பாலிசி இருக்கே அதுல நல்ல இன்ஷுரன்ஸ் பாலிசி எதுனு எப்படி கண்டுபிடிக்கிறது.
07
நல்ல நிதி ஆலோசகரைக் கேட்டால் நம்மோட சேமிப்பு நோக்கம், வயது. நம் நிதி நிலைமை, எத்தனை ப்ரீமியம் செலுத்த இயலும் இதெல்லாம் கேட்டு கணக்கு செய்து நமக்கு எது நல்ல பாலிசினு சொல்லுவாங்க. நம்ம CRK பைனான்ஷியல்ஸ் ரவி கிட்ட பேசி பாரு. உனக்கு நல்லா வழி காட்டுவார்.
நன்றி அறிவு

# Financial Trends

| HIGHEST INTEREST RATES ON FIXED DEPOSITS SCHEMES | | |
|---|---|---|
| FD Name | Rating | Interest Rate * (Up to) |
| Shriram Unnati Deposits | MAA+ by ICRA, FAA+ by CRISIL | 8.85% |
| PNB Housing Ltd | CRISIL FAAA | 8.20% |
| Mahindra & Mahindra Financial Services Ltd | CRISIL FAAA | 8.05% |
| Bajaj Finance Ltd | FAAA by CRISIL, MAAA by ICRA | 8.05% |
| ICICI Home Finance | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.85% |
| Sundaram BNP Paribas Home Finance Ltd. | ICRA MAA+ | 7.75% |
| HDFC Ltd. | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.65% |

* Highest rate including additional interest for Senior citizens, employees etc. wherever applicable.

* As of March 2020

| FUND PERFORMANCE CHART – OUR FAVORITE EQUITY FUNDS | | | | | |
|---|---|---|---|---|---|
| Fund Name | Category | 1 Year | 3 Year | 5 Year | *NAV |
| Mirae Asset Emerging Bluechip Reg-G | Large & Mid Cap | -19.93 | 0.44 | 7.85 | 42.24 |
| SBI Small Cap-G | Small Cap | -20.64 | -0.02 | 7.64 | 40.82 |
| Axis Small Cap Reg-G | Small Cap | -5.72 | 8.38 | 6.70 | 26.28 |
| Axis Focused 25-G | Multi Cap | -10.17 | 4.68 | 6.43 | 23.90 |
| Axis Midcap-G | Mid Cap | -9.02 | 6.23 | 5.81 | 32.32 |
| Axis Bluechip-G | Large Cap | -11.19 | 1.19 | 5.37 | 24.29 |
| Mirae Asset Large Cap Reg-G | Large Cap | -23.09 | -0.40 | 4.12 | 39.03 |
| Kotak Standard Multicap Reg-G | Multi Cap | -23.15 | -1.89 | 3.69 | 26.87 |
| Kotak Equity Opportunities Reg-G | Large & Mid Cap | -20.00 | -1.94 | 3.26 | 94.60 |
| ICICI Prudential Bluechip-G | Large Cap | -24.17 | -2.38 | 1.82 | 31.72 |
| HDFC Top 100-G | Large Cap | -32.09 | -5.28 | 0.13 | 340.58 |

| FUND PERFORMANCE CHART – OUR FAVORITE DEBT & DYNAMIC FUNDS | | | | | |
|---|---|---|---|---|---|
| Fund Name | Category | 1 Year | 3 Year | 5 Year | *NAV |
| Kotak Low Duration Fund (G) | Debt | 10.06 | 8.52 | 8.79 | 1837.74 |
| LIC MF Banking & PSU Debt-G | Debt | 6.98 | 7.03 | 7.06 | 25.67 |
| ICICI Prudential Regular Savings-G | Hybrid - Conservative Hybrid Fund | 6.20 | 6.60 | 7.22 | 30.95 |
| ICICI Prudential Floating Interest-G | Debt | 6.19 | 6.50 | 7.08 | 42.01 |
| HDFC Low Duration-G | Debt | 6.15 | 6.48 | 7.28 | 299.60 |
| Axis Equity Saver Reg-G | Debt | 0.84 | 5.70 | 7.04 | 43.39 |
| ICICI Prudential Balanced Advantage-G | Hybrid - Dynamic Asset Allocation | -5.67 | 3.29 | 0.00 | 12.07 |
| SBI Savings-G | Debt | -11.31 | 0.27 | 4.77 | 451.65 |
| ICICI Prudential Asset Allocator (FOF)-G | FoFs (Domestic) - Debt Oriented | -13.28 | 0.43 | 3.85 | 30.58 |
| HDFC Equity Savings-G | Hybrid - Equity Savings | -13.85 | 1.43 | 4.34 | 47.41 |

All Equity funds ranked on 5-year returns. Debt funds ranked on 1-year returns.

* NAV as of 27.03.2020



***Do you know?*** REC - Rural Electrification Corporation

CRK நிறுவனம் கடந்த 25.01.2020 அன்று மாம்பலத்தில் நடத்திய மருத்துவ முகாம்






## வாடிக்கையாளர் குரல்



"நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நல்ல தரமான பாதுகாப்பான முதலீடு செய்வதற்கு நல்ல ஆலோசகரைத் தேடிக் கொண்டிருந்தேன். ஒரு நண்பர் எனக்கு ரவியை அறிமுகம் செய்து வைத்தார். அவரது அணுகுமுறை மிகவும் ஈர்த்தது, வாடிக்கையாளரின் நலனை முன்னிட்டே அவரது அனைத்து செயல்களும் திட்டமிடப்பட்டு செம்மையாகச் செயலாற்றினார். மிகவும் நெருக்கடியான சவாலான தருணங்களிலும், என் முதலீடுகள் நல்ல லாபத்தையே தந்தன. அவரும் அவரது அலுவலகப் பணியாளர்களும் தரமான சேவை வழங்குகின்றனர். வாடிக்கையாளருக்குத் தேவையான விபரங்களை காலத்தே அனுப்புகின்றனர்."

**-Mr.V. Karthikeyan,**
Dy. Executive Director, Dalmia Bharat Cements



"*CRK Financial Solutions* என்பது ஒரு குடையின் கீழே எல்லா சேவைகளும் கிடைக்கும் இடம். தரமான சேவையினை வாடிக்கையாளரின் தேவை அறிந்து காலத்தே செய்கின்றார்கள். எனக்கு மனநிறைவும், திருப்தியும் மகிழ்ச்சியும் தரும் வண்ணம் அவர்கள் சேவை இருக்கிறது."

**- Mrs. Mohana Subramaniam**
IOB Staff (Retired)

## A NOTE TO OUR DEAR READERS

"Financial Insights" is an investor awareness publication by CRK Financial Solutions. It is being sent to some of you on a complimentary basis as part of our humble effort to ensure that more & more investors are made financially aware so that they get the best from their savings & investments. We sincerely hope that you like the contents of Financial Insights and in some way benefit from the same. Moreover, we would be happy to receive your feedback on the contents of this publication, we request you to please let us know by sending us an email on webmaster@chequeleaf.com. Alternatively, you can even write to us at our office address:

**CRK Financial Solutions, New No 75, Arya Gowda Road, West Mambalam, Chennai 600 033.**

PUBLISHER
**CRK Financial Solutions**
**+91 99416 06398**

EDITOR
**Chandramowleeswaran V**
**+91 98406 56627**

DESIGNER
**Vignesh Krishnamoorthy**
**+91 99529 78900**

PRINTER
**K.N. Madhavachari**
**Annai Designs +91 63803 59197**